# இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்


அவர் (இயேசு) தம் கைகளையும் விலாவையும் அவர்களிடம் காட்டினார். ஆண்டவரைக் கண்டதால் சீடர்கள் மகிழ்ச்சி கொண்டார்கள். இயேசு மீண்டும் அவர்களை நோக்கி, ``உங்களுக்கு அமைதி உரித்தாகுக! தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன்" என்றார். இதைச் சொன்னபின் அவர் அவர்கள்மேல் ஊதி, ``தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவை மன்னிக்கப்படா" என்றார். (யோவா 20:20-23)

# திருத்தந்தையின் ஆதரவுக்கு ஐ.நா.பொதுச்செயலர் நன்றி



திருத்தந்தை பிரான்சிஸ், ஐ.நா.பொதுச்செயலர் அந்தோனியோ கூட்டேரஸ்

**வத்திக்கான்**: தூய ஆவியார், நம்மை, இரக்கம் நிறைந்த திருஅவையாக, அதாவது, அனைவருக்கும் திறந்த இதயத்தைக் கொண்டிருக்கும் ஓர் அன்னையாக மாற்றமடையச் செய்கிறார்

தூய ஆவியார் பெருவிழாவுக்குத் தயாரிப்பாக, நவநாள் பக்திமுயற்சிகள் நடைபெறும் இந்நாள்களில், தூய ஆவியார் நம்மில் ஏற்படுத்தும் மாற்றங்கள் குறித்து, மே 26, இச்செவ்வாயன்று, தன் டுவிட்டர் செய்தியில் குறிப்பிட்டுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

**ஐ.நா. பொதுச்செயலர் திருத்தந்தைக்கு நன்றி**

மேலும், உலகளாவிய போர் நிறுத்தத்திற்கு, தான் விடுத்திருந்த அழைப்பிற்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஆதரவளித்ததற்கு நன்றி தெரிவித்துள்ளார், ஐ.நா. பொதுச்செயலர் அந்தோனியோ கூட்டேரஸ்.

"தற்போது உலகில் நிலவும் புதிய அச்சுறுத்தல்களுக்கு, புதிய முறையில் ஒன்றிப்பு மற்றும் ஒருமைப்பாடு தேவைப்படுகின்றன" என்ற தலைப்பில், வத்திக்கானின் செய்தித்துறைக்கு பேட்டியளித்த கூட்டேரஸ் அவர்கள், இவ்வாறு கூறியுள்ளார்.

உலகளாவிய போர் நிறுத்தத்திற்கு விடுத்த அழைப்பு, மற்றும், கோவிட்-19 கொள்ளைநோயின் எதிர்மறை தாக்கங்கள் குறித்த பல்வேறு கேள்விகளுக்கு, பதிலளித்த கூட்டேரஸ் அவர்கள், கோவிட்-19 கொள்ளைநோய், நாம் அனைவரும் விழித்தெழுவதற்கு அழைப்பு விடுத்துள்ளது என்று கூறினார்.

போர் நிறுத்தம் இடம்பெற்றால் மட்டுமே, உலகினர் அனைவரும் இணைந்து, தற்போதைய கொள்ளைநோய்க்கு எதிராகச் செயல்பட முடியும் என்றும், இதற்கு, இதுவரை, 115 அரசுகளும், மாநில அமைப்புகளும், 200க்கும் அதிகமான சமுதாய குழுக்களும், சமயத் தலைவர்களும் ஆதரவளித்துள்ளனர் என்றும் உரைத்த கூட்டேரஸ் அவர்கள், ஆயுதம் ஏந்திய 16 புரட்சிக்குழுக்கள், வன்முறையை கைவிட்டுவிடுவதாக உறுதியளித்துள்ளன என்று கூறினார்.

தனது உலகளாவிய போர் நிறுத்த அழைப்பிற்கு, இலட்சக்கணக்கான மக்கள், இணையதளம் வழியாக ஆதரவு தெரிவித்துள்ளனர் என்பதையும் பகிர்ந்துகொண்டார், கூட்டேரஸ்.

கோவிட்-19 கொள்ளைநோய், உலக அளவில், உடல்நலம் சார்ந்த நெருக்கடியை மட்டும் உருவாக்கவில்லை, மாறாக, இந்த நெருக்கடி காலத்தில், வெளிநாட்டவர்க்கு எதிரான உணர்வுகளும், சதித்திட்டங்களும், நிலவுகின்றன, சில நேரங்களில், செய்தியாளர்கள், நலவாழ்வு பணியாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் போன்றோரும் திட்டமிட்டு தாக்கப்படுகின்றனர் என்றும், கூட்டேரஸ் அவர்கள் கூறினார்

*-மேரி தெரேசா: வத்திக்கான் செய்திகள்*

## சமூகத் தொடர்பு சாதனங்கள்

இன்றைய சமூகத் தொடர்பு சாதனங்கள், பகைமை, உரிமைமீறல் போக்கு, மற்றும், எதிர்மறை எண்ணங்கள் என்ற கலவையை இளையோருக்கு ஊட்டுவதன் வழியாக, பெரும் அச்சுறுத்தல்களை வழங்கி வருகின்றன என்ற கவலையை வெளியிட்டுள்ளார், ஆசிய ஆயர் பேரவை கூட்டமைப்பின் தலைவரான கர்தினால் சார்லஸ் மாங் போ.

தவறான எண்ணங்களையும் போக்குகளையும் ஊக்குவிப்பதன் வழியாக, இளைய சமுதாயத்திற்கு கேடு விளைவித்து வரும் சமுகத்தொடர்பு சாதனங்கள் குறித்து, உலக சமூகத் தொடர்பு நாளுக்குரிய செய்தியில் கூறிய, மியான்மாரின் யாங்கூன் பேராயர், கர்தினால் போ அவர்கள், இத்தகைய போக்குகளால் வருங்காலத் தலைமுறையின் நன்னெறி வாழ்வு பெருமளவில் பாதிக்கப்படும் என்ற கவலையையும் தெரிவித்துள்ளார்.

சமூகத்தொடர்பு சாதனங்கள் வழங்கும் பொய்ச் செய்திகளால், மனித உறவுகளும், சமுதாய இணைக்க வாழ்வும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன என்பதையும் குறிப்பிட்ட கர்தினால் போ அவர்கள், சில சமூகத்தொடர்பாளர்களால் வழங்கப்படும் தீய செய்திகள் வருங்காலத் தலைமுறையை பெருமளவில் தொடர்ந்து பாதித்து வருகின்றன என்று கூறினார்.

குழந்தைகளுக்கு பகைமை உணர்வுகளையும், தீய எண்ணங்களையும் ஊட்டிவரும் இந்த சமூகத் தொடர்பு சாதனங்களுக்கு, எவ்வித தடுப்பு மருந்தும் இல்லாதது கவலையாக உள்ளது எனவும், கூறினார் கர்தினால் போ.

முகநூல் பக்கம் வழியாக அல்ல, மாறாக, முகத்துக்கு முகம் பார்த்துச் சொல்லப்படும் கதைகளால், மக்களிடையே உறவுகள் வளரவேண்டும் என்று திருத்தந்தை விடுத்துள்ள விண்ணப்பத்தை, கர்தினால் போ அவர்கள் மீண்டும் நினைவுறுத்தியுள்ளார். (UCAN)

# கொரோனாவுக்கு எதிராக பெட்டாலிங் ஜெயாவில் கூட்டு இறைவேண்டல்

**கோலாலம்பூர்:** பெட்டாலிங் ஜெயா பகுதியின் சமயங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு மன்றம் COVID-19-க்கு எதிராக கடவுளின் இரக்கத்தை முன் வைத்து இறைவேண்டல் செய்தது. இங்குள்ள விண்ணேற்பு பங்கின் சமயங்களுக்கிடையிலான ஒருகிணைப்பு பணிக்குழுவும் அதன் பங்குத்தந்தை அருட்தந்தை கிரிகோரி சான் அவர்களும் இணைந்து, திருத்தந்தை பிரான்சிஸ் மே 14-ம் திகதியன்று கொரோனா கிருமியின் பாதிப்புக்கு எதிராக இறைவேண்டல் செய்யவிடுத்த அழைப்பின் பேரில் இந்த வலையத்தள சந்திப்பை நடத்தினர்.

நோன்பு, இறைவேண்டல் மற்றும் தொண்டுப் பணிகளைச் செய்வதோடு மட்டுமல்லாமல் பொறுப்பாளர்களுடனும் இதர சமயத் தலைவர்கள் மற்றும் பிரிந்த சகோதர சபையிருடனும் இணைந்து வலைத்தளம் வழியாக 75 நிமிட இறைவேண்டல் நிகழ்வுக்கு இப்பணிக்குழு ஏற்பாடு செய்தது.

டேனியல் லிம் பஹாய் சமய இறைவேண்டலுடன் நிகழ்வைத் தொடங்கினார். அதைத் தொடர்ந்து மதிப்பிற்குரிய டத்தோ கே ஸ்ரீ தம்மரதன் ஒரு சுருக்கமான பகிர்வை வழங்கினார். அவரது பகிர்வில், இந்த கடினமான காலங்களில் சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட நிலையில், மக்கள் வாழ்வுக்குப் போராடுகிறார்கள். இது நிறைய எதிர்மறை எண்ணங்களை உருவாக்கக்கூடும் என்றும் இது பணம் சம்பாதிப்பதற்காக தீய செயல்களுக்கு வழிவகுக்கும் என்றும் கிறினார். "எனவே இந்த வலைத்தள அமர்வில் கிள்ளான் பள்ளத்தாக்கைச் சுற்றியுள்ள பிற மதங்களின் தலைவர்களுடன் இணைந்து இறைவேண்டல் செய்வதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். என்றார். சீக்கிய குரு தலைமையில் இசைக் கலைஞர்கள் இனிமையான செபங்களை வழங்கினர். அடுத்து இந்து மதத்தைச் சேர்ந்த சிவபாலன் அவர்களும் தாவோயிஸ்ட் சமயத்தைப் பிரதிநிதித்து டான் ஹோ சியோ அவர்களும் பாஸ்டர் ஜோசப் மற்றும் பாஸ்டர் மைக்கேல் ஆகியோரும் தத்தம் இறைவேண்டல் களை சமர்ப்பித்தனர்.

கத்தோலிக்க மறையின் சார்பாக, அருட்தந்தை கிரிகோரி சான் அவர்களும் இறுதியாக பேராயர் ஜூலியன் லியாவ் கவர்களும் கொரோனா தாக்குதலின் முடிவுக்காக இறைவேண்டலை ஒப்புக்




கொடுத்தனர்.

# கத்தோலிக்கத் திருஅவை சட்டம் எத்தகைய நோன்பை வலியுறுத்துகிறது?

கத்தோலிக்கத் திருஅவை தொடக்கத் திருஅவை காலத்திலிருந்தே நோன்பின் அவசியம் மற்றும் முக்கியத்துவத்தைப் பற்றி போதித்தும், வலியுறுத்தியும் கடைபிடித்தும் வருகிறது.

- பழைய ஏற்பாட்டிலும் நோன்பு பற்றிய குறிப்புகள் உண்டு. எ.கா. லேவி 16:31, - 2 சாமு 1:12, எசா 58:7

-இயேசுவும் நோன்பு இருத்தலைக் குறித்து போதித்துள்ளார். எ.கா. மத் 6:16, மத் 17:21

-தொடக்கத் திருவையில் நோன்பு கடைபிடிக்கப்பட்டது. எ.கா. திப 13:2-3, திப 14:23, திப 9:9

**தவக்கால நோன்பு**

தவக்காலம் பாவத்திற்காக மனம் வருந்தி மன்னிப்புப் பெற திருஅவை ஏற்படுத்திய காலம். பாஸ்கா பெருவிழாவில் ஆண்டவரின் உயிர்ப்பு வெற்றியில் பங்கு பெற நம்மைத் தயாரிக்கும் காலம். இக்காலத்தில் நோன்போடுக் கூடிய இறைவேண்டல் இன்றியமையாதது.

தவக்காலத்தில் ஏற்கும் நோன்பு (கத்தோலிக்க) திருஅவையின் சட்டத்திற்கு உட்பட்டதாகும்.

**திருஅவை சட்டம் 1250**

குறிப்பிட்ட நாள்களில் மாமிசம் (புலால்) தவிர்த்து, நோன்பு போன்ற தவ முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என இச்சட்டம் வலியுறுத்துகிறது..

அனைத்துலகத் திருஅவையில் ஆண்டின் எல்லா வெள்ளிக்கிழமைகளும் தவக் காலமும் தவத்துக்குரிய நாள்களாகும். கத்தோலிக்கத் திருஅவையில் நோன்பு என்பது ஒருநாள் முழுவதும் பட்டினி கிடப்பது என்று பொருளாகாது. உடல் திடகாத்திரமாக இருந்தும் நோன்பு ஏற்காதவர்களைத் தண்டிக்கும் அதிகாரமும் இல்லை. நோன்பு என்பது இறையன்புக்கும், இரக்கத்திற்கும், தயவுக்கும் உட்பட்டது.

நோன்பு என்பது:

1.குறைவான உணவு ஏற்பது
2.அதிகபடியான அல்லது தேவையற்ற செலவுகளைக் குறைப்பது.

எடுத்துக்காட்டாக, அடிக்கடி கடையில் உண்பது, புகைப்பிடித்தல், மதுபானம் அருந்துதல், சினிமாவுக்குச் செல்லுதல், வீண் செலவுகள் செய்தல் போன்றவை.

3. திருவிவிலியத்தின் படி நோன்பு என்பது உணவைப் பற்றியது மட்டுமல்ல அது ஆன்மாவைப் பற்றியதுமாகும். ஏனெனில் ஆன்மாவுக்குக் கேடு விளைவித்தால் பயனொன்றுமில்லை. எனவே, நோன்போடு கூடிய இறைவேண்டலும் தர்ம செயல்களும் அவசிமாகிறது. ஆகவே, தபம், நோன்பு, இறைவேண்டல் இவை மூன்றும் தவக்காலத்தோடு ஒன்றரக் கலந்தவை.

இது ஒருகாலத்தில் 'ஒருசந்தியும் சுத்த போசனமும்' கடைபிடித்தல் என்று கூறப்பட்டது. ஒரு சந்தி என்பது 'ஒரு சந்திப்பு' அதாவது ஒரு வேளை உணவை மட்டும் ஏற்பது ஆகும். சுத்தபோசனம் என்பது மாமிசம் இல்லாத உணவைக் குறிக்கிறது. (போசனம் என்றால் உணவு)

**திருஅவைச் சட்டம் 1251**

இச்சட்டத்தின்படி ஆண்டில் எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாமிச உணவை ஏற்கக்கூடாது. இங்கு மாமிசம் என்பது வெப்ப இரத்தம் உள்ள பிராணிகளின் இறைச்சியைக் குறிக்கிறது. ஆடு, மாடு, கோழி, வான்கோழி போன்றவை.

குளிர்ந்த இரத்தம் உள்ள பிராணிகளைத் தாராளமாக உண்ணலாம். குளிர்ந்த இரத்தப் பிராணிகள் என்பது மீன், இறால் (ஊடாங்), நண்டு, கனவாய் போன்ற நீரில் கடலில் வாழும் பிராணிகள். எனவே வெள்ளிக்கிழமைகளில் சீப்ஃபூட் (seafood) உணவுகளை உண்ணலாம்.

*இதற்கு வயது கட்டுப்பாடு கிடையாது. நோயுற்றோரைத் தவிர்த்து, ஒருவர் வாழ்நாள் முழுவதும் இந்த விதிமுறையைக் கடைபிடிக்க வேண்டும்.*

**கவனத்திற்கு:**

பெருவிழாக்கள் வரும் வெள்ளியன்றும் விபூதி புதனன்றும் மாமிச உணவை உண்ண ஆயர்கள் அனுமதி அளிப்பர். எடுத்துக்காட்டாக, சீனப்புத்தாண்டு வெள்ளிக்கிழமை அன்று கொண்டாடப் படுமேயானால், அதற்கு ஆயர்கள் அவர்களது பேரவை வாயிலாக விலக்கு அளிப்பர். ஆனால் அன்றைய நோன்பை வேறொரு நாளுக்கு ஒத்தி வைக்கலாம்.

**திருஅவைச் சட்டம் 1252**

அச்சட்டத்தின்படி பதினான்கு வயதுக்கு மேற்பட்டோர் இந்த நோன்பு ஏற்க வேண்டிய காலத்தில் நோன்பு இருக்கப் பணிக்கப்படுகிறார்கள். இது அறுபது வயதுவரைக்குமான ஓர் அழைப்பாகும். பதினான்கு வயதுக்குக் கீழ்ப்பட்டோருக்கு பெற்றோர் நோன்பின் அவசியம் மற்றும் நோக்கத்தை விளக்கி போதித்து வரவேண்டும். (தொடரும்)

# Laudato si' சிறப்பு ஆண்டிற்கு சிறப்பு இறைவேண்டல் திருத்தந்தை பிரான்சிஸ் -

மே 24, கடந்த ஞாயிறன்று தொடங்கியுள்ள, ' ஆண்டவரே, உமக்கே புகழ்' (Laudato si') சிறப்பு ஆண்டு பற்றிக் குறிப்பிட்டு, அவ்வாண்டிற்கென வெளியிடப்பட்டுள்ள சிறப்பு செபத்தைச் செபிக்குமாறு, கடந்த ஞாயிறு நண்பகலில் வழங்கிய அல்லேலூயா வாழ்த்தொலி உரைக்குப்பின் கேட்டுக் கொண்டார், திருத்தந்தை பிரான்சிஸ்.

மே 24 ஞாயிறிலிருந்து, 2021ம் ஆண்டு மே 24 வரை, Laudato si' சிறப்பு ஆண்டு கொண்டாடப்படும் என்று அறிவித்த திருத்தந்தை, கடந்த ஞாயிறன்று கடைப்பிடிக்கப்பட்ட 54-வது உலக சமூகத்தொடர்பு நாள் பற்றியும் குறிப்பிட்டார்.

நம் பொதுவான இல்லமாகிய இப்பூமியைப் பாதுகாப்பது பற்றிய, இறைவா உமக்கேப் புகழ் என்று பொருள்படும் Laudato si' திருமடல் வெளியிடப்பட்டு ஐந்து ஆண்டுகள், கடந்த ஞாயிறோடு நிறைவடைகின்றது என்பதை நினைவு படுத்திய திருத்தந்தை, இத்திருமடல், இப்பூமி மற்றும், ஏழைகள் சிந்தும் கண்ணீர் மீது கவனம் செலுத்துமாறு அழைப்பு விடுக்கிறது என்றும் கூறினார்.

வத்திக்கான் மாளிகையிலுள்ள தனது நூலகத்திலிருந்து வழங்கிய அல்லேலூயா வாழ்த்தொலி உரைக்குப்பின் இவ்வாறு கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நம் பொதுவான இல்லமாகிய இப்பூமி மற்றும், மிகவும் நலிந்த நம் சகோதரர் சகோதரிகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில், நல்மனம் கொண்ட அனைத்து மக்களும் பங்கேற்குமாறு கேட்டுக் கொண்டார்.

பேரழிவைச் சந்தித்துக் கொண்டிருக்கும் இந்த சிங்கார பூமி நம் சகோதரி என்று அழைத்தார் புனித பிரான்சிஸ் அசிசியார். அவரோடு இணைந்து அடுத்து வரும் இறைவேண்டலைச் சமர்ப்பிப்போம்.

**Laudato si' ஆண்டிற்கு இறைவேண்டல்**

அன்பான கடவுளே,

விண்ணையும், மண்ணையும் மற்றும்,
அவற்றிலுள்ள அனைத்தையும் படைத்தவரே,

எங்கள் மனங்களைத் திறந்தருளும் மற்றும்,
எங்கள் இதயங்களைத் தொட்டருளும்.

இதனால், நாங்கள் உம் கொடையாகிய
படைப்பின் ஓர் அங்கமாக இருக்க
இயலும்.

இந்த துன்பம் நிறைந்த நாள்களில்
தேவையில் இருப்பவர்களில்,
குறிப்பாக, கடும் வறியோர் மற்றும் மிகவும்
நலிந்தவர்களில் உடனிருந்தருளும்..

உலகளவில் பாதித்துள்ள
கொள்ளைநோயின் விளைவுகளை நாங்கள்
எதிர்கொள்கையில் படைப்பாற்றல் மிக்க
ஒருமைப்பாட்டை வெளிப்படுத்த எங்களுக்கு
உதவியருளும்.

பொதுவான நலனைத் தேடுகையில்
தேவைப்படும் மாற்றங்களை ஏற்பதில்
எங்களைத் துணிவுள்ளவர்களாக்கும்.

நாங்கள் ஒருவர் ஒருவருடன்
தொடர்புள்ளவர்கள் மற்றும், ஒருவர்
ஒருவரைச் சார்ந்தவர்கள் என்பதை,
எக்காலத்தையும் விட இக்காலத்தில்
அதிகமாக உணரச் செய்யும்.

இப்பூமியின் அழுகுரல் மற்றும், வறியோரின்
அழுகுரலுக்குச் செவிமடுத்து அவற்றுக்குப்
பதிலளிப்பதில் வெற்றியடைய எங்களுக்கு
உதவுவீராக.

அவர்களின் தற்போதைய துன்பங்கள்,
உடன்பிறந்த உணர்வு கொண்ட உலகின்
பேறுகால வேதனையாக மாறுவதாக.

இவையனைத்தையும், உதவிக்குரிய
அன்னை மரியாவின் அன்புப் பார்வையில்,
எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக,
இறைஞ்சி மன்றாடுகிறோம். .ஆமென்.



**"பளிங்கு போன்று ஆண்டவர்முன் நாம் ஒளிவுமறைவின்றி இருந்தோமானால், அவரின் இரக்கத்தின் ஒளி நம்மிலும், நம் வழியாக இந்த உலகிலும் சுடர்விடும்"**

*திருத்தந்தை பிரான்சிஸ் 19-05-2020*

# துணிவைத் தரும் தூய ஆவியார்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த மண்ணுலகைவிட்டுப் பிரிந்து செல்வதற்கு முன்பாக தன்னுடைய சீடர்களிடம், "நான் போவதால் நீங்கள் பயனடைவீர்கள். நான் போகாவிட்டால் தூய ஆவியார் உங்களிடையே வரமாட்டார்" என்றுரைத்தார். (யோவான் 16: 7). எனவே வாக்குமாறாத இயேசு தம்முடைய விண்ணேற்றத்திற்குப் பிறகு தூய ஆவியாரைச் சீடர்கள் மீது பொழியச் செய்தார். தூய ஆவியாரால் அருள்பொழிவுச் செய்யப்பட்ட பின்பு சீடர்கள் துணிவோடு ஆண்டவர் இயேசு கிறிஸ்து பற்றிய நற்செய்தியை ஊர்கள்தோறும் அறிவிக்கத் தொடங்கினர்.

தூய ஆவயார் பெருவிழாவான இன்று நாம் செவிமடுத்த வாசகங்களின் வழியாக இறைவன் நமக்குத் தரும் செய்தியை கவனத்துடன் தியானித்துப் பார்ப்போம். படைப்பின் தொடக்கத்தில் தண்ணீரிலே அசைவாடிக்கொண்டிருந்த தூய ஆவியார், ஆண்டவர் இயேசுவினுடைய பணிகளுக்கு உறுதுணையாக, உந்துசக்தியாக இருந்த தூய ஆவியார் இந்த நாளிலே நெருப்புப் போன்ற பிளவுற்ற நாவின் வடிவில் சீடர்கள் மீது, மக்கள்மீது இறங்கி வருகின்றார். அப்படி இறங்கி வந்த தூய ஆவியார் சீடர்களையும் மக்களையும் திடப்படுத்துகிறார். இந்த நாளில் தூய ஆவியார் நமக்கு வழங்கும் நன்மைகள், ஆசிர்வாதங்கள் என்னென்னவென்று சிந்தித்துப் பார்க்க அழைக்கப்படுகிறோம்.

முதலாவதாக தூய ஆவியார் வழங்கும் ஆசீர்வாதம் - நன்மை : 'இயேசுவே ஆண்டவர்' என அறிக்கையிடச் செய்கின்றது.. கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் பவுலடியார் கூறுகிறார், "தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவரன்றி வேறு எவரும் 'இயேசுவே ஆண்டவர்' எனச் சொல்லமுடியாது" என்று. 'இயேசுவே ஆண்டவர்' என்று அறிக்கையிடுவதற்கு தூய ஆவியாரின் வல்லமையானது நமக்குத் தேவையானதாக இருக்கின்றது. தூய ஆவியால் நிரப்பப்படாத ஒருவர் ஆண்டவர் இயேசுவைப் பற்றி அறிக்கையிட்டாலும் அது மேலோட்டமாக இருக்குமே தவிர முழுமை பெறாது. இன்றைக்கு எத்தனையோ மறைப்பணியாளர்கள், நற்செய்திப் பணியாளர்கள் ஆண்டவர் இயேசுவைப் பற்றி நற்செய்தியை எல்லா மக்களுக்கும் அறிவிக்கிறார்கள் என்றால் அதற்கு அடிப்படைக் காரணமாக இருப்பது தூய ஆவியார்தான்..

இரண்டாவதாக தூய ஆவியார் நமக்கு வழங்கக்கூடிய ஆசிர்வாதம்: நாம் பெற்றிருக்கும் நன்மைகள், கொடைகள் அனைத்தும் தனி ஒரு மனிதனுக்காக அல்ல, மாறாக பொதுநன்மைகாகவே என்ற உணர்வை தருகின்றது.. இன்றைக்கு அதிகமானோர் தாங்கள் பெற்றிருக்கும் கொடைகள் அனைத்தையும் தன்னுடைய நலனுக்காகவே பயன்படுத்தும் ஓர் அவலநிலையே தொடர்ந்து கொண்டிருக்கிறது. . இப்படி நாம் சுயநலத்தோடு வாழாமல், பொதுநலத்தோடு வாழவேண்டும் என்பதைத்தான் தூய ஆவியார் இன்று நமக்கு நினைவுவூட்டுகிறார்.

ஆகவே தூய ஆவியாரின் பெருவிழாவைக் கொண்டாடும் இந்த நல்ல நாளில் நாம் தூய ஆவியார் நமக்கு வழங்கும் ஆசிர்வாதங்களையும் கொடைகளையும் அவரது கனிகளையும் பெற்று மகிழ்வோம். அதோடு மட்டுமல்லாமல் நாம் தூய ஆவியாரின் தூண்டுதலுக்கு ஏற்ப வாழ்வோம்.

*-சவரிநாதன், சுங்கை பட்டாணி*

**தூய ஆவியார் பெருவிழா**

திப./Act 2: 1-11
திபா/Ps 104: 1ab,24ac. 29bc-30. 31,34
1கொரி/ 1 Cor 12: 3b-7, 12-13
யோவா/ Jn வாசகம் 20: 19-23

**ஞாயிறு வாசகம்: ஆண்டு I**

**வாரநாள் முதல் வாசகம்: 2**
**திருப்புகழ் மாலை : தூய ஆவி பெருவிழா**